**கேகாலை பிரதேச சபை**

**கேகாலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 30 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 03 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கேகாலை பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2013 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளுக்காக உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 193,399 தொகை மீளாய்வாண்டின் செலவினமாகக் கருதி கணக்கீடு செய்யப்பட்டமையால் மீளாய்வாண்டின் மிகை ரூபா 193,399 தொகை குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2013 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதம் முதல் திசெம்பர் மாதம் வரையான காலத்திற்குரிய செலுத்த வேண்டிய ரூபா 20,425 தொகையான முத்திரைக் கட்டணத்தை தயாரிக்கும் படிகள் மீளாய்வாண்டின் செலவினமாகக் கருதி

கணக்கீடு செய்யப்பட்டமையால் மீளாய்வாண்டின் மிகை ரூபா 20,425 தொகை குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு எஞ்சிய பொருட்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதியான ரூபா 1,768,024 தொகை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படாமையினால் மீளாய்வாண்டின் மிகை மற்றும் ஆண்டின் இறுதியில் இருப்பின் பெறுமதி என்பன ரூபா 1,768,024 வீதம் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது சபைக்குச் சொந்தமான மூன்று நூலகங்களுக்குரிய நன்கொடையாகக் கிடைக்கப்பெற்ற 196 புத்தகங்களின் பெறுமதியான ரூபா 31,696 தொகை மூலதனமாக்கப்படாமையினால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலையான சொத்துக்களின் பெறுமதி மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்குகின் மீதிகள் ரூபா 31,696 வீதம் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்ட மூன்று வேலைகளுக்குரிய ரூபா 252,072 தொகையான செலவினத்திற்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடு மேற்கொள்ளாமையினால் மீளாய்வாண்டின் மிகை ரூபா 252,072 தொகை அதிகரித்தும் ஆண்டின் இறுதியில் கடன்கொடுத்தோரின் பெறுமதி அந்த அளவினால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டில் நிதியத்தின் 09 மூலங்களின் கீழ் 975 வேலைகளை மேற்கொள்வதற்காக ஏனைய நிறுவனங்களிலிருந்து கிடைத்த ரூபா 148,013,505 தொகையில் மூலதன உதவிப் பணம் மற்றும் அதன் மூலம் செலவிடப்பட்ட ரூபா 146,306,954 மூலதனச் செலவினத் தொகை, வைப்புப் பெறுவனவுகள் மற்றும் வைப்புக் கொடுப்பனவுகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டமையால் மீளாய்வாண்டின் மிகை ரூபா 1,706,551 தொகை குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) மொறதன மற்றும் மொறொன்தொட்ட என்ற இரண்டு பொது நூலகத்திலும் பயன்பாட்டுப் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்ட 22 புத்தகங்களின் பெறுமதி கணிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட ரூபா 10,000 பெறுமதியுடைய தலேவல மயான நிலம் ரூபா 1,000 ஆகக் கணக்கீடு செய்யப்பட்டமையினால் நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 9,000 குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) சபைக்குச் சொந்தமான ரூபா 625,000 பெறுமதியான கெப் வண்டி மற்றும் உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சிலிருந்து கிடைத்த ரூபா 6,390,000 தொகையான கெப் வண்டி என்பவற்றின் பெறுமதி என்பன கணக்கீடு செய்யப்படாமையினால் நிலையான சொத்தின் பெறுமதி ரூபா 7,015,000 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

---

கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 9,485,760 பெறுமதியான காணி மற்றும் கட்டிடங்களில் 10 விடயங்கள் நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்படாமையினால் கணக்கு அறிக்கைகளின் பட்டோலைகளுடன் சொத்துப் பதிவேடு இணங்காமல் காணப்பட்டது.

**1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

---

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய மீதிகளின் பெறுமதி ரூபா 21,788,106 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 791,582 தொகை வருடமொன்றிற்கு மேற்பட்ட பழைய மீதியாகும்.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 1,506,161 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 398,223 தொகை வருடமொன்றிற்கு மேற்பட்ட பழையதாகும்.

## 1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 571 | 2008 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை 113 சந்தர்ப்பங்களின் போது வைப்புச் செய்யப்பட்ட ரூபா 1,035,809 தொகையினைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) சப்ரகமுவ மாகாண சபையின் நிதி விதிக்கோவை 261.2.2 ஆம் விதி | 2005 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 25,000 தொகையான பிரயாண முற்பணம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) சப்ரகமுவ மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2005 யூன் 01 ஆந் திகதிய 2005/4 ஆம் இலக்க சுற்றறிக்கை | |
| (i) இலக்கம் ii மற்றும் iii ஆம் பிரிவுகள் | கூறிடல் திட்டம் அங்கீகரிப்பதற்கு முன்னர் காணிக்கூறுகளின் விற்பனைப் பெறுமதி தொடர்பாக பெறப்பட்ட தற்காலிக மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு பெறப்படவேண்டிய 1 சதவீத முற்பணம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii) இலக்கம் iv ஆம் பிரிவு | காணி விற்பனையாளருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 17,525,581 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 16,077,745 ஆக இருந்தமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 1,447,836 அதிகரிப்பைக் காண்பித்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமாக சேகரித்தலின் செயலாற்றல்

செயலாளரினால் மீளாய்வாண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமான மூலம் | 2014.01.01 இல் நிலுவை | 2014.12.31 இல் நிலுவையில் அறவீடு | 2014 ஆம் ஆண்டில் பற்றுச்சீட்டிடல் | ஆண்டின் பற்றுச்சீட்டிடல் களில் அறவீடு | 2014.12.31 இல் நிலுவை | | மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 2014.01.01 இல் காணப்பட்ட மீதி | ஆண்டின் பற்றுச்சீட்டிடல்களில் நிலுவை | |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | ஆதனவரியும் வரியும் | 362,689 | 95,416 | 598,072 | 447,702 | 267,273 | 150,370 | 417,643 |
| ii. | வாடகை | 114,137 | 52,971 | 230,137 | 159,648 | 61,166 | 70,489 | 131,655 |

மேற்கூறப்பட்ட நிலுவை வருமான அறிக்கையை இறுதிக் கணக்குகளுடன் ஒப்பீடு செய்தபோது பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | **நிலுவை வருமான அறிக்கையின் பிரகாரம் மீதி** | **இறுதிக் கணக்கின் பிரகாரம் மீதி** |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| ஆதனவரியும் வரியும் | 417,643 | 256,198 |
| நிலுவையான ஏனைய வருமானம் | 131,655 | 21,078,765 |

### 2.2.2 வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம்

(அ) 2014 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட 13 வியாபார நிறுவனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 7,150 தொகையான அனுமதிப்பத்திரக் கட்டணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் சபையில் பதிவு செய்துள்ள இரண்டு ஹோட்டல்களில் முன்னைய ஆண்டின் விற்பனைப் புரள்வின் அடிப்படையில் 1 சதவீத வட்டி அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், ஹோட்டல் முகாமையாளரின் கூற்றின் அடிப்படையில் வரித் தொகை அறவிடப்பட்டிருந்தது.

### 2.2.3 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்த நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 18,675,303 ஆக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சப்ரகமுவ மாகாண சபையின் மூலம் வழங்கப்பட்ட ரூபா 8,922,450 தொகையான 09 வாகனங்களின் உரித்தை பிரதேச சபைக்கு கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது சபைக்குக் கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டுக் கடிதங்களின் மூலம் இனங்காணப்பட்ட 36 அனுமதியற்ற நிர்மாணங்களில் 15 தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், அனுமதியற்ற 16 நிர்மாணங்கள் தொடர்பாக சபை வழங்கிய கட்டளைகளை அமுல்படுத்தியமைக்கான பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையின் 06 ஊழியர்களின் சம்பளமற்ற விடுமுறை நாட்கள் பிழையாக கணிப்பிடப்பட்டதன் காரணமாக ஊழியர்களுக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்ட 49,938 தொகையான சம்பளத்தை மீள அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கழிவுப் பொருள் செயற்திட்டத்திற்காக மொறன்தொட்ட ஹால்மெஸ்ஸ லுணுகலவத்த காணியின் 10 ஏக்கர் அளவு சபரகமுவ மாகாண பிரதம அமைச்சரின் அங்கீகாரத்தில் ரூபா 40 இலட்சத்திற்கு 2014 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அரச மதிப்பீட்டாளரின் மதிப்பீடு ரூபா 30 இலட்சமாக இருந்தமையால் ரூபா 10 இலட்சம் மேலதிகமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 3.2 காணி கூறிடல்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) கட்டிட ஆராய்ச்சி நிறுவகம் இரண்டு சந்தர்ப்பங்களின் போது 08 ஏக்கர் 01 றூட் 8.41 பேர்ச் மாத்திரம் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், பிரதேச சபையின் மூலம் 13 ஏக்கர் 02 றூட் 22.67 பேர்ச் இற்காக கூறிடல் திட்டம்

அங்கீகரிக்கப்பட்டமையின் காரணமாக 05 ஏக்கர் 01 றூட் 14.26 பேர்ச் அளவொன்று மேலதிகமாக அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அந்த கூறிடல் திட்டம் அங்கீகரிக்கப்படும் போது கட்டிட ஆராய்ச்சி நிறுவகம் மூலம் வழங்கப்பட்ட ஆலோசனைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட நியதிகளை நிறைவேற்றும் முறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 10 ஏக்கர் 19 பேர்ச் இனையுடைய காணியொன்றை விற்பனை செய்வதற்குரிய கூறிடல் திட்டத்தை அங்கீகரிக்கும் போது சபையின் மூலம் 2014 நவம்பர் 12 இல் லழங்கப்பட்ட ஆலோசனைகளுக்கிடையே பிரதான வீதியினதும் உப வீதிகளினதும் வடிகாண் முறைமை மற்றும் மதகுகள் தேவையான இடங்களில் சபையின் ஆலோசனையின் பிரகாரம் கொங்கிரீட் இடல், சகல வீதிகளுக்காகவும் மூன்று சுற்று மின்சாரம் வழங்குதல், சபைக்கு கையேற்கப்பட்ட நிலப்பகுதியைச் சுற்றி வேலியொன்றை நிர்மாணித்தல் போன்ற விடயங்கள் 2015 சனவரி மாத கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரையிலும் நிறைவேற்றப்படாதிருந்த போதிலும் காணிப்பகுதிகளின் 90 சதவீதமான விற்பனை பூர்த்தியடைந்திருந்தது.

**3.3 விளைவற்ற மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய அசைவுறாது காணப்படுகின்ற சொத்துக்களின் பெறுமதி ரூபா 504,440 ஆகும்.

(ஆ) சபைக்குரிய ரூபா 1,051,050 பெறுமதியான 03 சொத்துக்கள் 03 வருடங்கள் முதல் 08 வருடங்கள் வரையிலான காலம் விளைவற்றுக் காணப்பட்டது.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட பாதீட்டில் நிதி ஏற்பாடு செய்யப்பட்ட 14 வேலை விடயங்களின் கூட்டுத்தொகையான ரூபா 5,438,000 நிதி ஏற்பாட்டில் 100 சதவீதமும், 13 வேலை விடயங்களின் கூட்டுத்தொகையான ரூபா 7,135,761 நிதி ஏற்பாட்டில் 50 சதவீதத்திற்கும் 99 சதவீதத்திற்கும் இடையிலும் ஆக ரூபா 12,573,761 கூட்டுமொத்தமாக சபையின் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.2 தீர்க்கப்படாத மற்றும் பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்

2015 யூன் 23 ஆந் திகதி வரையில் 02 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டிராததுடன் அந்த ஐயவினாக்களுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களின் கணிப்பீடு செய்யக்கூடிய பெறுமதி ரூபா 2,176,330 ஆகும்.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு
(இ) வருமான நிர்வாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு